அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் "பெற்றோர்களைக் கொண்டாடுவோம்" 6 வது மண்டல மாநாட்டில், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற பேரவை சபாநாயகர் மு.அப்பாவு பள்ளிகளின் வளர்ச்சிக்காக ரூ.642 கோடியே 86 இலட்சத்து 87 ஆயிரத்து 492 நன்கொடைகள் கொடை அளித்த நன்கொடையாளர்களையும், முதன்மைக் கல்வி அலுவலர்களையும் கௌரவித்தார்கள். முன்னதாக பள்ளிச் சீர் அரங்கங்களை திறந்து வைத்து விழா சிறப்புரையாற்றினார்கள். 'நீயா நானா' கோபி சிறப்புரை வழங்கிய இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வகாப், பள்ளிக் கல்வித்துறை அரசு செயலாளர் மதுமதி, தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் – ஆசிரியர் கழகத் துணைத் தலைவர் முத்துக்குமார், மாவட்ட ஆட்சியர் க.ப.கார்த்திக்கேயன், தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரிய கழக உறுப்பினர் கழக மாணவரணி தலைவர் இராஜீவ் காந்தி, தனியார் பள்ளிகள் இயக்குனர் பழனிசாமி, தொடக்கக் கல்வி இயக்குனர் நரேஷ், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதிஷ் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

கோவை மாவட்டம்: சாந்தலிங்க அடிகளார்

கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி மாணாக்கர் அருள்நெறி மன்ற 36-ஆம் ஆண்டு தொடக்கம் - முப்பெரும் விழா!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – மு.பெ.சாமிநாதன் பங்கேற்பு!

கோவை, செப். 1- கோயம்புத்தூர் மாவட்டம், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரியில் குமாரதேவர் மாணாக்கர் அருள் நெறி மன்ற 36ஆம் ஆண்டு தொடக்கம், அணிகாஞ்சி - தமிழ்மன்றம், நொய்யல் - தமிழ்மன்றம் ஆகிய முப்பெரும் விழாவில் நேற்று முன்தினம் (30.08.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ்விழாவில் தமிழ்த் துறை உதவிப்பேராசிரியர் முனைவர் சோ.நடராசு, வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் க.கதிர்வேல், கல்விசார் இயக்குநர் முனைவர் இரா.சரவணசெல்வன், முதல்வர் முனைவர் சு.சேதுராசன், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கா.திருநாவுக்கரசு, கல்விசார் நிர்வாகி முனைவர் வெ.சுகந்தா, மாண்புசார் செயலர் முனைவர் சி.சுப்பிரமணியம் பேரூர்ப் பேரூராட்சித் தலைவர் ப.அண்ணாதுரை மற்றும் 350க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர். இவ்விழாவில் கல்லூரியின் தலைவர் மேதமைசார் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்கள் அருளுரை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு என்று தமிழ்வளர்ச்சித்துறை யின் வாயிலாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், சிறப்புவாய்ந்த தமிழ் நூல்களை படைத்தார். தமிழை தம் உயிர் மூச்சாக கொண்டு வாழ்ந்தார். மேலும், தற்போது தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ் வளர்ச்சி, தமிழறிஞர்களின் வளர்ச்சினை கருத்தில்கொண்டு, பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார்கள்.

இம்மன்றம் 1988ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கல்லூரியின் அரசு உதவிப் பெறாப் பிரிவின் மன்றம். கன்னட நாட்டு அரச பதவியைத் துறந்து சாந்தலிங்கப் பெருமானின் அருளாற்றலை அறிந்து சாந்தலிங்கரின் அருட்சீடரானவர் குமாரதேவர் அவர் தம் திருப்பெயரால் இம்மன்றம் அமைந்துள்ளது. இம்மன்றத்தின்கீழ் அரசு உதவி பெறாப் பிரிவின் பி.காம், பி.காம் பி.ஏ, பி.காம் சி.ஏ, பி.காம் ஏப், பி.எஸ்.சி (சி.எஸ்), பி.சி.ஏ, பி.ஏ ஆங்கிலம், பி.எஸ்.சி கணிதம் ஆகிய அனைத்துத் துறைகளும் அடங்கும். ஒவ்வொரு துறை வாரியாக கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் நடத்துதல், ஆண்டுதோறும் தொடக்கவிழா, ஆண்டு விழாக்களை நடத்துதல் ஆதியன இதன் முக்கியச் செயல்பாடுகள் ஆகும்.

துறை வாரியாக மன்றங்களை அமைத்துக் கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் நடத்துதல், ஆண்டுதோறும் தொடக்கவிழா, ஆண்டு நிறைவு விழாக்களை நடத்துதல் அரசு உதவிப்பெறாப் பிரிவின் கல்வி சார்ந்த அனைத்துச் செயல்பாடுகளாகிய நாட்டுநலப்பணித் திட்டம், தேசிய மாணவர் படை, செஞ்சுருள் சங்கம், சாரணர் இயக்கம், விளையாட்டு ஆகிய அனைத்தும் இதில் அடங்கும்.

அணி காஞ்சி தமிழ் மன்றம் கல்லூரியின் அரசு உதவி பெறும் பிரிவு தமிழ்த்துறையினால் உருவாக்கப்பட்டது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் மேற்குத் தொடர்ச்சிமலையில் உற்பத்தியாகி காவிரியில் கலக்கும் நதியாகிய நொய்யல்நதியைக் குறிப்பிடும் போது "அணிகாஞ்சி வாய்ப் பேரூர்" எனக் குறிப்பிடுகிறார். அதிலிருந்து அணிகாஞ்சி என்ற பெயர் இம்மன்றத்திற்கு அமைந்துள்ளது. 1953ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இம்மன்றம் 70 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து தமிழ் வளர்க்கும் பணியைச் செய்து வருகிறது. தமிழ்ப் படிக்கும் மாணவர்கள் தங்களுக்குள் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம் எனப் பல்வேறு திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

கல்லூரியின் அரசு உதவி பெறாப் பிரிவு தமிழ்த்துறையினால் உருவாக்கப்பட்டது நொய்யல் தமிழ்மன்றம் பேரூரில் கல்லூரியை ஒட்டி ஓடிக்கொண்டிருக்கும் நொய்யல் நதியின் பெயர் இம்மன்றத்திற்கு அமைந்துள்ளது. 1988-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இம்மன்றம் 35 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து தமிழ் வளர்க்கும் பணியைச் செய்து வருகிறது. தமிழை ஒரு பாடமாக மட்டும் கொண்டு பயிலும் மாணவர்களில் தமிழார்வம் மிக்க மாணவர்களைத் தேர்ந்தெடுத்துப் போட்டிகள் நடத்துதல், சொற்பொழிவுகள் நடத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இத்திருமடமும் கல்லூரியும் எமது பாட்டனார் காலத்துடன் தொடர்புடையது. இருபத்து நான்காம் குருமகா சந்நிதானங்கள் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்கள் எப்போதும் என்னை வாழ்த்தி ஆலோசனைகளை வழங்குபவர். தமிழ் வளர்ச்சிக்குக் கல்லூரி செய்யும் பணிகளுக்கும் தமிழ் வளர்ச்சித்துறை துணை நிற்கும்"என தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சித்துறை சாதனைகள் குறிப்புக் கையேட்டை அமைச்சர் அவர்கள் வெளியிட்டு, குருமகா சந்நிதானங்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

"முதலமைச்சர் அவர்கள் தலைமையில் செயல்படும் அரசு இளையோர்களுக்குக் குறிப்பாக மாணவர்களுக்கான அரசாகச் செயல்படுகிறது. அரசு கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி, அதன்வாயிலாக ஊக்கத்தொகை, உதவித் தொகைகள் வழங்கிவருகின்றது. "இந்த கல்லூரியில் நீண்ட காலமாகச் செயல்படும் மன்றங்களாகவும், தமிழுக்காக மூன்று மன்றங்கள் செயல்படுவதையும் இங்கு தான் பார்க்கிறேன். கொங்குநாட்டில் தமிழ் வளர்க்கும் அரும்பணியைச் சாந்தலிங்க அடிகளார் கல்லூரி செய்து வருகிறது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

தொடர்ந்து மன்றச் செயலர்கள், இணைச் செயலர்கள், உறுப்பினர்களின் பதவியேற்பும் உறுதிமொழி எடுக்கும் நிகழ்வும் நடைபெற்றன. அமைச்சர் பெருமக்கள் மாணவர்களுக்கு உறுப்பினர் அட்டையை வழங்கிப் பொறுப்பேற்கச் செய்தனர்.

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

சோழிங்கநல்லூர் மத்தியப் பகுதி வட்ட வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டங்கள்!

பகுதி செயலாளர் ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ அறிவிப்பு!

சென்னை, செப். 1 சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் மத்தியப் பகுதியில் உள்ள வட்டங்களின் செயல்வீரர்கள் கூட்டங்கள் பின்வரும் விவரப்படி நடைபெறுகிறது. இதில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா. சுப்பிரமணியன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார். மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மாவட்ட கழகத்தால் அறிவிக்கப்பட்ட மாவட்ட பொருளாளர் எஸ்.பாஸ்கரன் எம்சி ஆகியோரும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

இது குறித்து ச.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு

199வது வட்டம்: தலைமை: வட்டக் கழக செயலாளர் ஜி. சங்கர் 02.09.2024 திங்கட்கிழமை மாலை 6 மணி கணேச நாயக்கர் திருமண மண்டபம், சோழிங்கநல்லூர்.

200வது வட்டம். தலைமை: வட்டக் கழக செயலாளர் ஆர்.நாகராஜ் . 02.09.2024 திங்கட்கிழமை மாலை 7 மணி சுனாமி நகர், செம்மஞ்சேரி.

191வது வட்டம் : தலைமை: வட்டக் கழக செயலாளர் ஜி.ரவி. 3.09.2024 செவ்வாய்கிழமை காலை 9 மணி விக்னேஷ்வரா திருமண மண்டபம், ஜல்லடையன் பேட்டை.

190வது வட்டம்: தலைமை: வட்டக் கழக செயலாளர் எப்.ஆரோன் அரசு. 03.09.2024 செவ்வாய்கிழமை காலை 10 மணி ஐஸ்வர்யா திருமண மண்டபம், பள்ளிக்கரணை

189வது வட்டம்: தலைமை: வட்டக் கழக செயலாளர். வ.பாபு.எம்சி 03.09.2024 செவ்வாய்கிழமை காலை 11மணி PR பேலஸ், 200அடி சாலை, பள்ளிக்கரணை.

198வது வட்டம்: தலைமை: வட்டக் கழக செயலாளர். பா. தேவகுமார் 03.09.2024 செவ்வாய்கிழமை நண்பகல் 12.30 மணி திருமண மண்டபம், விப்ரோ சாலை, சோழிங்கநல்லூர்.

197வது வட்டம் : தலைமை: வட்டக் கழக செயலாளர். டி.ராஜேந்திரன். 06.09.2024 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி ஜி.பி.ஜனராஜன் திருமண மண்டபம், அக்கரை சோழிங்கநல்லூர்.

மேற்படி பொது உறுப்பினர் கூட்டங்களின் தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள், கழக ஆதரவாளர்கள், அனைத்து கழக தோழர்கள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்தில் தவறாமல் அனைத்து கூட்டத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு சோழிங்கநல்லூர் மத்திய பகுதி செயலாளரும், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான ச.அரவிந்த்ரமேஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்குகிறார்!

எழும்பூர் தெற்குப் பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

சென்னை, செப்.1- சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி தி.மு.க பொது உறுப்பினர்கள் ஆலோசனைக்கூட்டம் நாளை (2.9.2024 திங்கட்கிழமை), மாலை 5.00மணியளவில் எஸ்.ஆர்.மஹால், ராட்டிலர் தெரு சூளை, சென்னை - 112 நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் பி.கே.சேகர்பாபு பொது உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே இன்னாள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், மாநில நிர்வாகிகள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், மண்டல குழு தலைவர்கள்பகுதி கழக செயலாளர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பகுதி, வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிள் கழக முன்னோடிகள், பாகமுகவர்கள், கழக செயல்வீரர்கள், அனைவரை கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

மா.சுப்பிரமணியன் - எஸ்.குணசேகரன் - ஏ.எம்.வி.பிரபாகரராஜா - க.தனசேகரன் - மு.ராசா - கே.கண்ணன் பங்கேற்பு!

கலைஞர்நகர் 128 வது - 128 (அ) வட்டக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர்கள் மு.கோவிந்தராஜன் - வீ.ஏ.ராஜா அறிக்கை!

சென்னை, செப். 1 - சென்னை தெற்கு மாவட்டம், விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கலைஞர்நகர் வடக்குப் பகுதி, 128 வது மற்றும் 128 (அ) வட்டக் கழகங்கள் பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று (1.9.2024 - ஞாயிற்றுக்கிழமை) 128 வது வட்டக் கழகச் செயலாளர் மு.கோவிந்தராஜன் தலைமையில் மாலை 4 மணிக்கும்,

128 (அ) வட்டக் கழகச் செயலாளர் வீ.ஏ.ராஜா தலைமையில் மாலை 5 மணிக்கும் பொது உறுப்பினர்கள் கூட்டம் விருகம்பாக்கம், ஏ.கே.ஆர்.திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், எஸ்.குணசேகரன், தொகுதிப் பார்வையாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின், பகுதிக் கழகச் செயலாளர்கள் மு.ராசா, கே.கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் உ.துரைராஜ் எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், வாசுகி பாண்டியன், ரத்னா லோகேஸ்வரன், பொன்.வர. லோகு, சு.இளங்கோவன், சசிகுமார், கனிமொழி தனசேகரன், நிஷா, சையத் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

எனவே 128 வது மற்றும் 128 (அ) வட்டங்களுக்குட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், பாக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் செயல்வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டக் கழகச் செயலாளர்கள் மு.கோவிந்தராஜன், வீ.ஏ.ராஜா ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மதுரவாயல் தெற்குப் பகுதி

152வது வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ. - பாலவாக்கம் மு.மனோகரன் பங்கேற்பு!

மதுரவாயல், செப்.1 சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, 152வது வட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன், அறிவுறுத்தலின்படி வட்ட கழக அவைத்தலைவர்ஜெ.பாஸ்கரன் தலைமையில் வட்ட பொது உறுப்பினர் கூட்டம் இன்று (01.09.2024) மாலை 05.00 மணியளவில் வளசரவாக்கம் பார்வதிமஹால் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ. மற்றும் மாவட்ட துணைச் செயலாளர் - கூட்ட ஒருங்கிணைப்பாளர் பாலவாக்கம் மு.மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

எஸ்.பாரதி அண்ணாவேலவன் எம்.சி., இரா.கோதண்டன், எஸ்.பி.ஜி.பிரபு, கே.பாண்டீஸ்வரி, ஜி.ஜான்பீட்டர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் எஸ்.அருணாசலம், இராமாபுரம் வ.செல்வகுமார், எம்.சி., அ.விஜயபாலா, வி.ராஜேஷ், பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி, எம்.சி., கே.ராஜி, எம்.சி., ச.சங்கர்கணேஷ், எம்.சி., செ.ரவி, சி.நல்லதம்பி, ஜி.மன்மத ராஜ், ஆர்.வி.கே.தமிழ்மாறன், ஏ.எல்.ராமு, டி.சத்தியசீலன், எம்.ஆல்பர்ட், வி.அற்புதநாதன், ஆ.முனுசாமி, கு.விஜய குமார், ஆர்.ராஜ்குமார், கே.வாசுதேவன், டி.வெங்கடேசன், ஏ.அருள்தாஸ், ஜி.அடிசன், டி.பவித்ரன், கே.நரசய்யா, ஆ.ரவி, டி.ராஜேஷ், மகேஷ், பி.எம்.கே.பிரபா மற்றும் மதுரவாயல் பாக முகவர்கள், கழக முன்னோடிகள், கழக செயல்வீர்கள் மற்றும் பாக நிலை உறுப்பினர்கள் கலந்து கொள்கிறார்கள்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை! இரா.துரைராஜ் முன்னிலை!

சைதை கிழக்கு 172 வது வட்ட செயல்வீரர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் நேருநகர் எஸ்.பாட்சா வேண்டுகோள்!

சென்னை, செப். 1 - சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 172 வது வட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று (01.09.2024, ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணியளவில் சமூகநலக்கூடம். மடுவின்கரையில் எனது (நேரு நகர் எஸ். பாட்சா) தலைமையில் நடைபெறுகிறது.

பகுதி செயலாளர், 13வது மண்டல குழுத்தலைவர் இரா. துரைராஜ் முன்னிலை வகித்துப் பேசுகிறார். பகுதி அவைத் தலைவர் இ.முருகேசன் , மாவட்டப் பிரதிநிதி க.உமாபதி, ஜி.யோவான், கழக பேச்சாளர் க. ஒப்பிலாமணி, வட்ட கழக நிர்வாகிகள் : கே.வி. ஜோய், எஸ். ஆசிக் அலி, உ.திருவேங்கடம். ஈ. ஹேமலதா, மடுவை டி. அன்பு,. சகாதேவன், என்.கே. வெங்கடேசன், எஸ்.அசோக்குமார், பு.ஜவகர்தீன், எம்.முருகன், ஆர். மலர்விழி, ஆர். சம்பத்குமார், ஆர். சரவணன், பி குமார், எம். குமரவேல், ஜெ. சின்னத்துரை ஆகியோர் வரவேற்கின்றனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் - மாவட்டச் செலாளர் மா. சுப்பிரமணியன், தமிழச்சி தங்கபாண்டியன், எம்.பி. தலைமை கழக தேர்தல் பொறுப்பாளர் கோ.வி. லெனின், தொகுதி பார்வையாளர் திருமதி. வாசுகி பாண்டியன் உரையாற்றுகின்றனர்.

எல். பரமன், மடுவை பிரகாஷ், பொன். அனுமந்தன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இக்கூட்டத்தில் வட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழகச் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் வட்டச் செயலாளர் நேருநகர் எஸ். பாட்சா கேட்டுக்கொண்டுள்ளார்.

காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. - பாலவாக்கம் மு.மனோகரன் பங்கேற்பு!

149வது வட்ட பொது உறுப்பினர் கூட்டம்! அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

வட்டச் செயலாளர் த.ரமேஷ் அறிக்கை!

சென்னை, செப்.01- மதுரவாயல் தெற்கு பகுதி 149வது வட்ட பொது உறுப்பினர் கூட்டம் இன்று (01.09.2024) காலை 9.00 மணியளவில் நடைபெறுகின்றது என்று வட்ட கழக செயலாளர் த.ரமேஷ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 149வது வட்டத்தில் அவைத் தலைவர் வி.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் வட்ட பொது உறுப்பினர் கூட்டம் இன்று (01.09.2024, ஞாயிற்றுக்கிழமை) ஆழ்வார்த்திருநகர் குகா திருமண மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துணை அமைச்சருமான மா. சுப்பிரணியம், மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க. கணபதி, மதுரவாயல் தொகுதி வட்ட பொது உறுப்பினர்கள், கூட்ட ஒருங்கினைப்பாளருமான மாவட்ட துணை செயலாளருமான பாலவாக்கம் மு.மனோகர், மதுரவாயல் தெற்கு பகுதி துணை செயலாளர் வே.மதியழகன், 149வது வார்டு மாமன்ற வார்டு மாமன்ற உறுப்பினர் செல்வி ரமேஷ் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் முன்னாள் போரூர் பேரூராட்சி தலைவர் எஸ்.அருணாசலம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வகுமார் எம்.சி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் இராமாபுரம் அ.விஜயபாலா, மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் இராமாபுரம் வி.இராஜேஷ், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ச.சங்கர்கணேஷ் எம்.சி., இராமாபுரம் சே.ரவி மற்றும் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் பி.எம்.செல்வராஜ், இரா.பால்பாண்டியன், திருமதி. எஸ். பாரதி எம்.சி., கே.ராஜு எம்.சி. மற்றும் மாவட்ட பிரதிநிதி ஆர்.சிவலிங்கம், ஆர்.சுரேஷ்பாபு தி.ந.கமலநாதன், எம்.குமார், பி.எஸ். துரைசாமி, திருமதி.குப்புராஜேந்திரன், திருவாளர்கள் கே. சரவணன், எம்.ஏ.வி.சீனிவாசன், எஸ்.ஆறுமுகம், எஸ்.அமுல்ராஜ், கே.ஜெகதீசன், கே.முத்துராமன், ஆர். வினோத், ஆர். விஜய், எஸ். பரத், கே.எஸ்.பிரதாபன், எம்.ஏ. வீரராகவன், கே.ஜி. ஜெயவேல், டி. சித்ராதங்கராஜ், எஸ். சுந்தர்ராஜன், எஸ். கார்த்திகேயன், எம். கே.தணிகாசலம், பி.சேகர், வி.ராஜேந்திரன், எஸ். மோசஸ், எம்.அமுல்ராஜ், சி.பாலமுருகன், என்.உடையப்பா, டி.மோகனவேல், டி.பொன்முத்துரமேஷ், ஏ.கணேசன், எஸ். ரவி, சி. சிவராமகிருஷ்ணன், சுஜாதா நரசிம்மன், ஹேமந்த்குமார், எம். கிருஷ்ணன், வி.டி. அரசு, ஆர். கல்யாணசுந்தரம், கே.எம்.சம்பத், ஆர்.எம். பழனியப்பன், எம்.சுரேஷ், கே.சரவணன், இ.சரவணன், ஆர்.ரவீந்திரன், என்.ராஜா, எஸ்.சத்தியநாராயணன், எம்.சின்னு, முத்துபாண்டி கார்த்திக், எஸ்.பி. புஷ்பராஜ், டி. மோகன்ராஜ், கே.பாரதி, ஸ்வீட் கிருஷ்ணன், ஆட்டோ விஸ்வநாதன், பி. செல்வகுமாரி, என்.கீதா, ஆர்.விஜயா, லட்சுமி, பவானி, வட்சலா, கிருஷ்ணி, ஏ. தமிழ்காவியா, ஏ.அய்த்தான், பி.டி.சி.சுப்பிரமணி, டி.யோகேஷ் , எம்.கங்காதரன், பாக்கியராஜ் மற்றும் இளைஞரணி மாணவரணி, மகளிரணி கழகத்தின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து சிறப்பிக்கின்றார்கள்.

இந்நிகழ்ச்சியில் இறுதியாக 149வது வட்ட பகுதி பிரதிநிதி எம். முரளி நன்றியுரை ஆற்றுகிறார்.

இவ்வாறு 149வது வட்ட கழக செயலாளர் த.ரமேஷ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - நந்தனம் கி.மதி எம்.சி. பங்கேற்பு!

123 'அ' வட்டக்கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

வட்டச் செயலாளர் மு.இராஜேந்திரன் அறிக்கை!

சென்னை செப். 01- சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்குபகுதி 123 அ வட்டக் கழக பொது உறுப்பினர் கூட்டம் இன்று 01-09-2014 ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணியளவில் சென்னை-18 தேனாம்பேட்டை பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள சமூகநலக் கூடத்தில் வட்டக் கழக அவைத் தலைவர் ஜி.முருகன் தலைமையிலும், 123 அ வட்டக்கழக செயலாளர் மூ. இராஜேந்திரன் நிகழ்ச்சி ஏற்பாட்டிலும் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் மார்கெட் குமார், மா.தினேஷ்குமார், ஆர்.அன்பு, இ.மாரி, வி. வெங்கடேசன், எம். செல்வம் அப்பு, வி.வினாயகம் ஆகியோர் வரவேற்பிலும் மற்றும் மாவட்ட இலைக்கிய அணி அமைப் பாளர் விஜய் வெங்கடேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் இரா. சக்ரவர்த்தி, பகுதிக்கழக நிர்வாககள் ஜி.ஆர். இராஜேந்திரன், ஆர்.எல்.வி. அசோக்குமார், பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநா தன், ஜி. முருகையன், பி.இந்திரக்க குமார், என். கிருஷ்ணக் குமார், எம்.எழில்ராஜ், சி. வி. திவாண்குமார், பி.மாறன், டி.சுசீத்தரி, ஏ.கந்தசாமி, ஏ.ராஜேஷ் வீரராகவன், ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

இந்த பொது உறுப்பினர் கூட்டத்திற்கு அறிவுரை வழங்க சிறப்பு அழைப்பாளராக சென்னை சென் மேற்கு மாவட்டக் கழக செயலாளரும், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினருமான மயிலை த.வேலு மற்றும் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம்.கி.மதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

ஆகவே இக்கூட்டத்திற்கு வட்டக் கழகத்திற்குட்பட்ட மாவட்ட பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி ஆதிதிராவிட நலக்குழு, பொறியாளர் அணி, இலக்கிய அணி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் (BLA-2), மற்றும்கழகமுன்னோடிகள் கழக செயல் வீரர்கள் அணைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு 123 அ வட்டக் கழக செயலாளர் மூ. இராஜேந்திரன் அறிக்கை விடுத்துள்ளார்.